# ஆசிரியர்களுக்கான தொழில்முறை கோட்பாடுகள்

அகில இந்திய ஆசிரியர் கூட்டணி (AIPTF)


All India Primary Teachers' Federation
24th Biennial Conference
"Code of Professionals Ethics Workshop"
from 1st to 2nd November 2007
Venue: Hotel Doda's, Jaipur, Rajasthan

# முன்னுரை

சமுதாயத்திலுள்ள பல்வேறு தொழில்களில் கற்பித்தல் ஒரு தொழிலாகும். எந்த ஒரு தொழிலில் இருக்கும் நபரும் குறிப்பிட்ட சில தரநிலைகளிலும் நடத்தைகளிலும் தன்னை வெளிக்காட்டிட வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறார்கள். ஒவ்வொரு தொழில்முறை வல்லுநர்களிடம் இருந்தும் குறிப்பிட்ட சில எதிர்பார்ப்புகள் உள்ளன. மக்கள் எதிர்பார்க்கின்ற ஒரு தொழில்முறை வல்லுநராக ஒரு நபர் செயல்படுகிறார் என்றால், அவர் ஒரு தொழில்முறை வல்லுநராக ஏற்றுக்கொள்ளப்படுகிறார்.

ஒவ்வொரு தொழில்முறை அமைப்புகளும் அவைசார்ந்த தங்கள் உறுப்பினர்கள் கடைபிடிப்பதற்கான தொழில்முறை நன்னெறிக் கோட்பாடுகள் ஒன்றை உருவாக்குகின்றன. இத்தகைய தொழில்முறை நன்னெறிக் கோட்பாடுகள் தொழிலுக்குத் தொழில் மாறுபடுகின்றன. எடுத்துக்காட்டாக மருத்துவத் தொழில்முறை வல்லுநர்கள் வழக்கமாக தங்களுடைய பயிற்சியை நிறைவு செய்துவிட்டு மருத்துவப் பயிற்சியை தொடங்கும் வேளையில் உறுதிமொழி ஒன்றை எடுத்துக்கொள்கின்றனர். ஒரு தொழில்முறை வல்லுநர் தன்னுடைய உறுப்பினர்களிடம் நடந்துகொள்ளும் விதத்தை தொழில்முறை நன்னெறிக்கோட்பாடுகள் முறைப்படுத்துகின்றன.

தொழில்முறை நன்னெறிகள் கோட்பாட்டை கடைப்பிடிப்பதன் மூலம் தங்களின் உறுப்பினர்களுக்கு தொழில்முறை வல்லுநர்களால் அளிக்கப்படும் சேவையின் தரம் மேம்படுகிறது. மேலும் தொழில்முறை நன்னெறிக் கோட்பாட்டை கடைப்பிடிப்பது சமுதாயத்தில் தொழிலின் மதிப்பையும் மரியாதையையும் மேம்படுத்துகிறது.

தொழில்முறை நன்னெறிக் கோட்பாடு தொழிலிலுள்ள உறுப்பினர்களால் கடைப்பிடிக்கப்படுவது அவர்களின் சுய–கட்டுப்பாட்டின் வாயிலாக அடையப்படுகிறது. தொழில்முறை சங்கங்களும் கூட தங்களுடைய உறுப்பினர்கள் தங்களுக்காகவும் தங்களைச் சார்ந்தவர்களின் நலனுக்காகவும் நெறிமுறைக் கோட்பாட்டை கடைப்பிடிக்க வலியுறுத்துகின்றன.

அகில இந்திய ஆசிரியர் கூட்டணி கல்விசார் ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக்கான தேசிய கவுன்சிலுடன் கூட்டாக இணைந்து ஆசிரியர்களுக்கான தொழில்முறை நன்னெறிகள் கோட்பாடு ஒன்றை 1997ல் உருவாக்கியது. அதன் பிறகு மீண்டும் 2005ல் ஹரித்துவாரிலும் 2007ல் ஜெய்ப்பூரிலும் நடந்த அகில இந்திய ஆசிரியர் கூட்டணியின் பொதுக்குழு கூட்டங்களில் விவாதிக்கப்பட்டு திருத்தம் செய்யப்பட்டது. AIPTF தலைவர் திரு.ராம்பால்சிங் அவர்களின் தலைமையில் ஹரித்துவாரில் நடைபெற்ற பொதுக்குழுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ஜெய்ப்பூரில் பொதுக்குழு உறுப்பினர்களால் நன்னெறிக் கோட்பாடு ஒருமனதாக ஏற்பு செய்யப்பட்டது.

அரசுப் பள்ளிகளில் மாணவர்களுக்கு அளிக்கப்படுகின்ற கல்வியின் தரத்தை உயர்த்துவதை கருத்தில் கொண்டு இந்த தொழில்முறை நன்னெறிக் கோட்பாட்டை அகில இந்திய ஆசிரியர் கூட்டணியின் அனைத்து உறுப்பினர்களும் பின்பற்றிட வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன். இதன்மூலம் அனைவருக்கும் தரமான கல்வி என்ற நீண்டகால குறிக்கோளை அடைவதற்கு வழிவகுத்திடும்.

தொழில்முறை நெறிமுறைகளின் கோட்பாட்டை ஒவ்வொரு ஆசிரியரிடமும் கொண்டு செல்வதற்கு கல்விசார்ந்தும் பொருளாதார ரீதியாகவும் ஆதரவளித்த உலக வங்கியின் தலைமைக் கல்விசார் நிபுணர் திரு.சாம்கார்ல்ஸன் அவர்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

**சு.ஈசுவரன்**
**பொதுச்செயலாளர், AIPTF**

கல்வியின் தரம், குறிப்பாக நம் நாட்டில் தொடக்கக் கல்வி நிலையில் பின்டைவாக உள்ளது. நம் சமுதாயத்தில் பள்ளியின் தரத்தை மேம்படுத்துவது ஒரு தீவிரமான கவலை கொள்ளும் விதமாக உள்ளது. பல காரணிகளால் கல்வியின் தரம் பின்னடைவாக இருந்தாலும், பள்ளியின் கீழான தரத்திற்கு ஆசிரியர்கள் தான் பெரிதளவு பொறுப்பு என்று மக்கள் மத்தியில் ஒரு பொதுவான கருத்து நிலவுகிறது. அதன் தொடர் விளைவாக, நம்முடைய சமுதாயத்தில் ஆசிரியர்களின் மதிப்பும் மரியாதையும் பல வருடங்களாகவே தொடர்ந்து குறைந்து வருகிறது. ஆசிரியர்களின் மதிப்பும் மரியாதையும் கடந்த காலத்தில் மிகவும் உயர்வாக இருந்தது.

ஆசிரியர்களின் மதிப்பும் மரியாதையும் குறைவது அனைவருக்குமான ஒரு கவலை தரும் செயலாகும். ஆசிரியர்களின் மதிப்பையும் மரியாதையையும் உயர்த்துவதற்கு, குறிப்பாக தொடக்க மற்றும் நடுநிலைப்பள்ளி ஆசிரியர்கள் மீது அகில இந்திய ஆசிரியர் கூட்டணி அக்கறை கொண்டுள்ளது. தங்களுடைய பிள்ளைகளுக்கு ஆசிரியர்களால் வழங்கப்படும் கல்விச் சேவையின் தரம் குறித்து பொதுமக்கள் மத்தியில் நம்பிக்கையை ஏற்படுத்துவதற்கான பொறுப்பை தாங்கள் ஏற்றிருக்கிறார்கள் என்பதை ஆசிரியர்கள் தற்போது உணரத் தொடங்கியுள்ளனர். ஆசிரியர் தொழிலில் நுழைகின்ற தனிநபர் ஒருவர் ஒழுக்கமான நடத்தைக்கான அதிகபட்ச தரநிலைகளுடன் இணங்கி நடப்பதற்கு ஒரு உறுதிப்பாட்டை எடுத்துக்கொள்ள வேண்டும். இது அவருடைய பணியிடத்தில் அவர் சிறப்பாக செயல்படத் தூண்டுவதற்கு இன்றியமையாததாகும்.

ஒவ்வொரு தொழிலும் குறிப்பிட்ட மதிப்புகளையும் நெறிமுறைகளையும் கொண்டுள்ளது. ஆசிரியர் தொழிலும் கூட தனக்குரிய நெறிமுறைகளை தன்வசம் கொண்டுள்ளது. தொழில்முறை நன்நெறி கோட்பாட்டை கடைப்பிடிப்பதன் மூலம் ஆசிரியர்கள் தங்கள் மதிப்பையும் சுய மரியாதையையும் வளர்ப்பதற்கும் சமுதாயத்தில் இத்தொழிலின் மீது உள்ள மரியாதையை அதிகரிக்கச் செய்வதற்கும் குறிப்பிடத் தகுந்த வகையில் பங்களிக்க முடியும். மாணவர்கள், பெற்றோர்கள் / காப்பாளர்கள், சமுதாயம் மற்றும் தேசம், தொழில், உடன் பணியாற்றுபவர்கள் மேலாண்மை, நிர்வாகம் மற்றும் தொழில்முறை அமைப்புகளை நன்னெறி நடத்தையில் உயர்ந்த நிலையை அடையச் செய்து திகழ வைப்பது ஆசிரியர்களின் பொறுப்பு.

## அணிந்துரை

- ஒவ்வொரு பிள்ளையும் சிறந்த தரத்திலான கல்வியைப் பெறுவதற்கு அடிப்படை உரிமையைப் பெற்றுள்ளதை உணர்ந்து கொள்ளுதல்.
- ஆளுமையை வளர்ப்பதற்கு அனைத்து விதங்களிலும் இயங்குவதும், இயக்குவதும் கல்வி எனக் கண்டு கொள்ளுதல்.
- வழிகாட்டும் கொள்கைகளான ஜனநாயகம், சமூக நீதி மற்றும் மதச்சார்பின்மை போன்ற நமது வளர்ச்சிக்குரிய கொள்கைகள் உண்மையான வளர்ச்சி பெற தேவையான நெறிமுறைகளைத் தருவது கல்வி என அறிதல்.
- நம்முடைய உயர்ந்த பண்பாட்டுப் பாரம்பரியம், தேசிய உணர்வு, சர்வதேச இணக்கம் மற்றும் உலக சமாதானம் ஆகியவற்றை மேம்பாடடையச் செய்வதற்கு கல்வி தேவை என உணர்தல்.
- சமுதாயச் சூழல், தேவைகளை பகிர்தல் மற்றும் மக்களின் விருப்பம் ஆகியவற்றில் இரண்டறக் கலந்திருப்பவர்கள் ஆசிரியர்கள் என உணர்ந்துகொள்ளுதல்.

- தலைசிறந்த அறிவு, பிரத்யேகமான ஆற்றல்கள் மற்றும் அர்ப்பணிப்பு உணர்வு ஆகியவை என்பதால் கற்பித்தல் ஒரு தேவையான தொழில் என உணர்ந்து கொள்ளுதல்.
- சமுதாயம், ஆசிரியர் சமுதாயத்தை மதிப்பதும் ஆதரிப்பதும் ஆசிரியர்களின் தரமான கற்பித்தல் மற்றும் முறையான மனப்பூர்வமான ஈடுபாட்டைச் சார்ந்ததே என உணர்தல்.
- ஆசிரியர் சமுதாய உறுப்பினர்கள் மத்தியில் தங்களுக்கு சுய வழிகாட்டுதல் மற்றும் சுய–ஒழுக்கம் தேவை என உணர்தல்.

# தொழில்முறை நன்னெறிக் கோட்பாட்டின் கூறுகள்

## அ. மாணவர்களுடன் ஆசிரியர் உறவு

***ஆசிரியர்கள் செய்ய வேண்டியவை :***

1. ஐக்கிய நாடுகள் சபை சாசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சிறுவர்களின் உரிமைகள் (1989) என கல்விக்குப் பொருந்தும் வழிவகைகளில் இருந்து பிள்ளைகள் நன்மை பெறுவதற்கான உரிமைகளை மதித்தல்.
2. மாணவர்களின் அறிவு, சமூகம் மற்றும் ஒழுக்கம் சார்ந்த வளர்ச்சியை எப்பொழுதும் ஊக்குவித்தல்.
3. சாதி, இனம், பாலினம், அந்தஸ்த்து, மதம், மொழி மற்றும் பிறப்பிடம் ஆகியவற்றை மதிக்காத பாரபட்சமில்லாத நடுநிலைமையுடன் மாணவர்களிடம் கருணையுடன் கூடிய அன்பைச் செலுத்த வேண்டும்.
4. மாணவர் ஒருவர் தொடர்பான இரகசியம் காக்கப்பட வேண்டிய இயற்கையான இயல்பு குறித்த தகவல்களை, அவர்களின் பெற்றோர்கள் அல்லது சட்டப்படியான காப்பாளர் தவிர்த்து மற்ற எவருக்கும் வெளிப்படுத்தக் கூடாது.
5. ஆசிரியர், மாணவர்களுக்கு இடையேயான உரிமையான உறவுமுறையை சுயநலத்திற்கு பயன்படுத்தக் கூடாது.
6. மாணவர்களின் ஒழுக்கம் மற்றும் மதரீதியான நம்பிக்கைகளுக்கு மதிப்பளித்தல்.
7. பாலியல்ரீதியான வன்கொடுமை அல்லது எச்.ஐ.வி.எய்ட்ஸ் போன்ற கொடிய நோய்கள் ஏற்படாதவாறு தன்னுடைய மாணவர்களை பாதுகாப்பதற்கான அனைத்து சாத்தியமான நடவடிக்கைகளையும் எடுத்தல்.
8. ஆசிரியர்கள், மாணவர்களுக்கு எடுத்துக்காட்டாக நாகரிகமான உடை உடுத்தி நற்பண்புகளோடு நடந்து கொள்ளுதல்.

## ஆ. பெற்றோர்கள்/காப்பாளர்களுடன் ஆசிரியரின் உறவு

***ஆசிரியர்கள் செய்ய வேண்டியவை :***

1. தங்களுடைய பிள்ளைகளின் மேம்பாடு குறித்த தகவல்களை அறிந்து கொள்வதற்கான பெற்றோர்களுக்குள்ள உரிமைகளை உணர்ந்து கொள்ள வேண்டும்.
2. பிள்ளைகளின் கற்றல் அறிவையும் பள்ளியின் செயல்பாட்டையும் மேம்படுத்துவதற்கு பெற்றோர்களுடன் நட்புறவை ஏற்படுத்திக் கொண்டு அதை தொடர்ந்து பராமரித்து அவர்களின் ஒத்துழைப்பைப் பெற வேண்டும்.

3. பெற்றோர்கள் அல்லது காப்பாளர்கள் மீது மாணவர்கள் வைத்துள்ள நம்பிக்கையை குலைத்திடும் செயல்களில் இருந்தும் விலகியிருக்க வேண்டும்.

## இ. சமூகம் மற்றும் தேசம் தொடர்பான ஆசிரியர்களின் உறவு

***ஆசிரியர்கள் செய்ய வேண்டியவை :***

1. பிரச்சனைகளால் உருவாகும் சாவல்களை எதிர்கொள்வதற்கு ஏதுவான சமூகப் பிரச்சனைகளை புரிந்துகொண்டு அதனை தீர்ப்பதற்குரிய நடவடிக்கைகளில் பங்கெடுக்க முயற்சி மேற்கொள்ள வேண்டும்.
2. காழ்ப்புணர்ச்சியோடு கூடிய பகை அல்லது வேறுபட்ட சமுதாயத்தினர், மதத்தினர் மற்றும் மொழிவாரி குழுக்களிடையே மறைமுகமாக பகை வளர்க்கும் நடவடிக்கைகளில் ஈடுபடுவதிலிருந்து விலகியிருக்க வேண்டும்.
3. பள்ளி, சமுதாயம், நாடு மற்றும் தேசத்திற்கு விசுவாசமானவர்களாக இருக்க வேண்டும்.
4. மாணவர்களிடையே விரும்பத்தக்க மனித நற்பண்புகளை அவர்களின் மனதில் ஆழமாக பதிய வைத்திடல் வேண்டும்.
5. தேசிய ஒருமைப்பாட்டை ஊக்குவித்து வளர்த்திட வேண்டும்.
6. அரசியலமைப்பில் இறையாண்மையை காப்பதற்கான தங்களுடைய அடிப்படை கடமைகளைச் செய்வதற்கு மாணவர்களுக்கு அறிவுரை சொல்லுதல் வேண்டும்.

## ஈ. தொழில் மற்றும் உடன் பணியாற்றுபவர் தொடர்பான ஆசிரியர்களின் உறவு

***ஆசிரியர்கள் செய்ய வேண்டியவை :***

1. அனைத்து மாணவர்களுக்கும் தரமான கல்வியை வழங்குவதன் மூலம் பொதுமக்களின் நம்பிக்கையையும் ஆதரவையும் பெற வேண்டும்.
2. தங்களுடைய பாடங்களுக்கான அறிவை தொடர்ந்து புதுப்பித்துக் கொண்டு தங்களுடைய கற்பித்தல் பணியை தகுதியுள்ளதாக்கிக் கொள்ள வேண்டும்.
3. தான் தொழில்முறை வல்லுநர் என்ற எண்ணத்தை வளர்த்துக் கொள்ளவேண்டும்.
4. கற்றுக்கொடுக்க வேண்டிய பாடங்களுக்கான தயாரிப்பு பணியை முழுவதுமாக செய்த பிறகே பாடத்திட்டத்தை பயனுள்ளதாக செய்ய முடியும்.
5. உடன் பணியாற்றுபவர்கள் மீது மற்ற ஆசிரியர்கள், அலுவலர்கள் அல்லது பெற்றோர்கள் குறிப்பாக, மாணவர்கள் முன்னிலையில் அவதூறான கருத்துக்களை வெளியிடுவதைத் தவிர்த்திட வேண்டும்.
6. கல்வி நிலையத்திற்கு உள்ளேயும் வெளியேயும் நிலையத்தின் தலைமையுடனும் உடன் பணியாற்றுபவர்களுடனும் பாடத்திட்டம் மற்றும் பாடத்திட்டம் சார்ந்த நடவடிக்கைகளில் ஒத்துழைக்க வேண்டும்.
7. உடன் பணியாற்றுபவர்களின் தொழில்முறை நிலைப்பாடு மற்றும் எண்ணங்களுக்கு மதிப்பளிப்பதன் மூலம் அவர்களுக்கு இடையே ஒற்றுமையை வளர்க்க வேண்டும்.
8. உடன் பணியாற்றுபவர்களின் நல்வாழ்விற்கான ஆர்வங்களை வளர்த்து பாதுகாத்திட வேண்டும்.
9. ஆசிரியர் தொழிலுக்கான விரும்பத்தக்க பண்புகளைக் கடைப்பிடிக்க வேண்டும்.

10. தாங்கள் எவ்வாறு நடத்தப்பட வேண்டும் என்று நினைக்கிறார்களோ தம்தொழில் சார்ந்த உறுப்பினர்களையும் அவ்வாறே அவர்கள் நடத்திட வேண்டும்.
11. தங்களுடன் பணியாற்றுபவர்களுக்கு எதிரான ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை சுமத்துவதை தவிர்க்க வேண்டும்.

## எ. நிர்வாகத்துடனான ஆசிரியர்களின் உறவு

***ஆசிரியர்கள் செய்ய வேண்டியவை :***

1. சட்டம் மற்றும் நிர்வாகரீதியிலான உரிமைகள் குறித்தும் நிர்வாகத்திற்கான தங்களுடைய பொறுப்புகள் குறித்தும் அறிந்திருக்க வேண்டும்.
2. நிர்வாகத்திடமிருந்து பெறப்படும் அறிவுரைகளை செயல்படுத்த வேண்டும் மற்றும் தீர்மானிக்கப்பட்ட நடைமுறை மற்றும் வழிமுறையின் வாயிலாக அவ்வறிவுரைகள் தொடர்பான சந்தேகங்களை கேட்பதற்கும் உரிமையை கொண்டிருப்பதையும் அறிந்து கொள்ளவேண்டும்.
3. தங்களுடைய தொழில்முறை நடவடிக்கைகள் மற்றும் வெளிப்பாடுகளின் வாயிலாக இரு தரப்பின் மதிப்பையும் மரியாதையையும் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

## ஏ. ஆசிரியர் சங்கம் தொடர்பான ஆசிரியர்களின் உறவு

***ஆசிரியர்கள் செய்ய வேண்டியவை :***

1. மாநில/தேசிய/சர்வதேச நிலைகளில் உள்ள ஆசிரியர் சங்கங்களில் உறுப்பினர்களாக வேண்டும். இதனை அவர்கள் தங்களின் தொழில்முறை பொறுப்பாக கருத வேண்டும்.
2. தங்களின் தொழில்முறையிலான வளர்ச்சி மற்றும் சங்கத்தின் வலிமையையும் அதன் ஒற்றுமை மற்றும் கூட்டுப் பொறுப்புணர்வின் வலிமையையும் பெருக்குவதற்காக ஆசிரியர் சங்க செயல்பாடுகளில் பங்கேற்க வேண்டும்.
3. சங்கத்தின் நடவடிக்கைகளில் இருக்கும் குறைபாடுகளை ஆக்கப்பூர்வமான முறையில் எடுத்துரைக்க வேண்டும்.
4. ஆசிரியர் சங்கத்தின் மேம்பாட்டிற்கான மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும்.

அகில இந்திய ஆசிரியர் கூட்டணி
ஜெய்ப்பூர் மாநாட்டின் போது நடைபெற்ற அகில இந்தியப்
பொதுக்குழுவில்
ஆசிரியர்களுக்கான தொழில்முறை நெறிமுறைகள் ஒருமனதாக
ஏற்பு செய்யப்பட்டது.
நவம்பர் 3 மற்றும் 4ஆம் தேதி 2007



செயல்பாட்டில் கூட்டு ஒருமைப்பாடு

**அகில இந்திய ஆசிரியர் கூட்டணி (AIPTF)**
ஷிக்ஷாக் பவன், 41-இன்ஸ்ட்டிட்யூசனல் ஏரியா
டி.ப்ளாக், ஜனக்பூரி, நீயு டெல்லி–110058
தொலைபேசி : (91-11) 28520671, 28522039 தொலைப்பிரதி : 28525271
மின்னஞ்சல் : aiptfindia@yahoo.com